# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி

## முன்னிலை : திருமதி.P. சுமிதா, பி.ஏ., எல்.எல்.பி.,

## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, தென்காசி

திருவள்ளுவராண்டு, 2053 சுபகிருது வருடம், சித்திரை திங்கள், 6-ம் நாள்

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண். 269/2020**

**(**CNR No. TNTL110003842020**)**

நடராஜன் --- வாதி

/எதிர்/

1. கணேசன்
2. கண்ணன்
3. பெரிய சாத்தாக்கனி --- பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்னர் 08.04.2022 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.Y.ஆசாத் அவர்கள் முன்னிலையாகியும், முன்னதாக, 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.தங்கராஜ் அவர்கள் ஆஜராகியும், போதிய கால அவகாசம் வழங்கிய பின்னரும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத நிலையிலும், 2ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், போதிய கால அவகாசம் வழங்கிய பின்னரும், நீதிமன்றத்தில் முன்னிலையாகாத நிலையில், அழைத்தும் ஆஜராகாததாலும், எவ்வித எடுத்துரைப்புமில்லாததாலும், 1, 2, 3 பிரதிவாதிகளைப் பொறுத்து ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரையைக் கேட்டறிந்தும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

இவ்வழக்கானது, பிராது தபசில் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, ஏவு ஆட்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையாணை பிறப்பிக்க வேண்டியும், மற்றும் இவ்வழக்கின் செலவு தொகை வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும் படிக்கும் வேண்டி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்குரையின் சுருக்கம்** :-

இந்நீதிமன்ற அதிகார வரம்பிற்குட்பட்ட பிராது தபசில் சொத்து கடந்த 09.09.1989 ம் தேதியன்று தென்காசி ஆதி திராவிடர் நலம் தனி வட்டாட்சியர் அவர்களால் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனை திட்டத்தின்படி 1ம் பிரதிவாதிக்கும் அவரது மனைவி கலைமதி என்பவருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட காலி இடம் ஆகும். மேற்படி இடத்தின் இலவச வீட்டு மனை பட்டா எண் 174 ஆகும். இவ்வழக்கு வாதியின் மனைவி கருப்பம்மாள் என்பவரின் உடன்பிறந்த இளைய சகோதரர் தான் 1ம் பிரதிவாதி ஆவார். 1ம் பிரதிவாதியின் மகன் 2 ம் பிரதிவாதி ஆவார். அவர்களின் உறவினர் 3 ம் பிரதிவாதி ஆவார்.

(ii) பிராது தபசில் சொத்து 1ம் பிரதிவாதிக்கும் அவரது மனைவிக்கும் ஆதி திராவிடர் நலத்துறையில் இருந்து இலவசமாக கொடுக்கப்பட்ட இடம் என்பதால் மேற்படி இடத்தினை அவ்வாறு ஒப்படைவு பெறும் நபர் 30 வருடங்களுக்கு மேற்படி நிலத்தை விற்கவோ அல்லது வேறு எந்த வகையிலும் பாராதீனம் செய்யவோ கூடாது என்பது அரசின் நிபந்தனை ஆகும். இந்நிலையில், கடந்த சுமார் 26 வருடங்களுக்கு முன் 1ம் பிரதிவாதி, அவரது மனைவி கலைமதி ஆகியோர் 1ம் பிரதிவாதியின் சகோதரியும், வாதியின் மனைவியுமான கருப்பம்மாள் என்பவரிடம் பிராது தபசில் சொத்தினை ரூ.10,000/-க்கு கிரையம் கொடுத்து விட்டனர். அரசு நிபந்தனையின்படி பிராது தபசில் சொத்திற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரைய ஆவணம் பதிவு செய்ய முடியாது என்பதால் பிராது சொத்தின் கிரையத்திற்கு ஆதரவாக 1ம் பிரதிவாதியும், அவரது மனைவியும்

வாதியின் மனைவி கருப்பம்மாள் என்பவருக்கு கைத்தடி கிரைய ஆவணம் பிறப்பித்து கொடுத்திருந்தனர்.

(iii) அதன்பின், பிராது தபசில் சொத்தில் வாதியும் அவரது மனைவியும் குடிசை வீடு கட்டி அதில் உரிமையாளர் நிலையில் கடந்த சுமார் 26 ஆண்டுகளாக யாவரும் தெரியும் வண்ணம் வெளிப்படையாகவும், எவ்விதமான நிராட்சேபனையின்றியும் குடியிருந்து அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில், பிராது தபசில் சொத்தில் வாதி குடியிருந்து வந்த குடிசை வீடு சிதிலமடைந்து விட்ட காரணத்தால் வாதி அதனை கடந்த 2019 ம் வருடம் ஜூலை மாதம் இடித்து அப்புறப்படுத்திய போது, 1ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் வாதியின் மனைவிக்கு ஏற்கனவே பிறப்பித்துக் கொடுத்திருந்த கைத்தடி ஆவணம் எங்கோ தவறிவிட்டது. எனவே, வாதியின் மனைவி 1ம் பிரதிவாதியிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க 1ம் பிரதிவாதியும் அவரது மனைவி கலைமதியும் சேர்ந்து மீண்டும் கடந்த 20.09.2019 ம் தேதியன்று ரூ.100/- பெறுமானமுள்ள முத்திரை தாளில் வாதியின் மனைவி ஏற்கனவே கடந்த 27 வருடங்களுக்கு முன்பு பெற்றிருந்த கிரையத்தை உறுதிப்படுத்தி மீண்டும் ஓர் பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் சாட்சிகள் முன்புக்கு பிறப்பித்துக் கொடுத்தனர்.

(iv) 1ம் பிரதிவாதிக்கும் அவரது மனைவிக்கும் ஆதி திராவிடர் நலத்துறையில் கொடுக்கப்பட்ட பிராது தபசில் சொத்து 30 ஆண்டுகளை கடந்துவிட்ட நிலையில், 1ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் பிராது தபசில் சொத்தினை வாதியின் மனைவிக்கு ஏற்கனவே கைத்தடி ஆவணம் மூலம் கிரையம் கொடுத்திருந்த காரணத்தால், அதன் வாயிலாக வாதியின் மனைவி கருப்பம்மாள் என்பவர் பிராது தபசில் சொத்தையும், வேறு சொத்தினையும் அவரது கணவரான இவ்வழக்கு வாதிக்கு கடந்த 05.11.2019 ம் தேதியன்று சிவகிரி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 2348/2019 மூலம் ஏற்பாடு ஆவணம் பிறப்பித்துக் கொடுத்திருந்தார். அதன்பின் வாதி பிராது தபசில் சொத்திற்கு கடையநல்லூர் நகராட்சியில் அவரது பெயரில் காலி மனை தீர்வை விதிக்கப்பட்டு அதனை செலுத்தியுள்ளார். இந்நிலையில், வாதி பிராது தபசில் சொத்தில் தமிழக

அரசின் பசுமை வீட்டு திட்டத்தின் கீழ் வீடு கட்ட கடந்த 2020 ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்ப கட்ட பவுண்டேசன் அமைத்திருந்தார். இவ்வழக்கு 1, 2 பிரதிவாதிகள் வாதியிடம் கூடுதல் பணம் கேட்டு, அதற்கு வாதி மறுத்த காரணத்தினால் 1, 2 பிரதிவாதிகள் தூண்டுதலின் பேரில் 3 ம் பிரதிவாதி வாதி கட்டியிருந்த பவுண்டேசனை அழித்து தேசப்படுத்தி விட்டார். மேலும், வாதியையும் அவரது மனைவியையும் பிராது தபசில் சொத்தில் வீடு கட்ட விடாமல் பிரதிவாதிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்ந்து இடையூறு செய்து மிரட்டி வந்தார்கள்.

(v) எனவே, வாதியின் மனைவி இவ்வழக்கு பிரதிவாதிகள் மீது கடந்த 06.02.2020 அன்று கடையநல்லூர் காவல் நிலையத்தில் கொடுத்திருந்த புகார் மனு மீதான விசாரணைக்கு ஆஜரான பிரதிவாதிகள் பிராது தபசில் சொத்தில் வீடு கட்டுவது தொடர்பாக வாதியையும் அவரது மனைவியையும் எவ்விதமான இடையூறும் செய்ய மாட்டோம் என எழுத்துப்பூர்வமாக வாக்குமூலம் கொடுத்து சென்றனர். அதன் பின்னரும் பிரதிவாதிகள் வாதியையும் அவரது மனைவியையும் தொடர் இடையூறு செய்து மிரட்டி வந்த காரணத்தினால் வாதியின் மனைவி பிரதிவாதிகள் மீது கடந்த 11.02.2020 அன்று தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்திருந்த புகார் மனு மீதான விசாரணைக்கு ஆஜரான பிரதிவாதிகள் கடையநல்லூர் காவல் நிலையத்தில் மீண்டும் ஆஜராகி வாதியையும் அவரது மனைவியையும் எவ்விதமான இடையூறும் செய்ய மாட்டோம் என எழுத்துப்பூர்வமாக வாக்குமூலம் கொடுத்து சென்றனர்.

(vi) இருப்பினும், பிரதிவாதிகள் வாதியிடமும் அவரது மனைவியிடமும் கூடுதலாக பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தொடர்ந்து மிரட்டி வாதியின் அமைதியான அனுபவத்தினை இடையூறு செய்து வருகின்றனர். பிரதிவாதிகள் மற்றும் அவர்களது வகையறாக்களின் செய்கையினால் வாதி மற்றும் அவரது மனைவியின் உடல்நிலை மற்றும் மனநிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மருத்துவ செலவுக்கு வேண்டி வாதி பிராது தபசில் சொத்தினை கடையநல்லூரை சார்ந்த மாடசாமி என்பவருக்கு ரூ.50,000/-க்கு கடையநல்லூர் சார்பதிவக அடமான ஆவண எண்

3365/2020 மூலம் கடந்த 28.09.2020 ம் தேதியன்று அடமான ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளார்.

(vii) பிராது தபசில் சொத்தில் வாதியை தவிர பிரதிவாதிகளுக்கோ, அல்லது வேறு யாருக்குமோ எவ்வித உரிமையோ, அனுபவமோ, பாத்தியதையோ என்றும் கிடையாது. பிராது தபசில் சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகள் முற்றிலும் ஓர் அன்னியர் ஆவர். பிராது தபசில் சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகளுக்கு எவ்விதமான பாத்தியதையும், அனுபவமும், உரிமையும் கிடையாது. பிரதிவாதிகள் பிராது தபசில் சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தினை இடையூறு செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள். வாதிக்கு நீதிமன்ற பாதுகாப்பு தவிர வேறு பாதுகாப்பு கிடையாது. பிரதிவாதிகளின் சட்டவிரோதமான செய்கையை நீதிமன்றத்தின் உத்தரவு மூலம் தடை செய்யப்பட வேண்டியது அவசியமானது. ஆகையால், பிராது தபசில் சொத்தை வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, ஏவு ஆட்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையாணை பரிகாரம் பிறப்பிக்க கேட்டு வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில், கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் மூலம் ஆஜரான 1, 3 பிரதிவாதிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கிய பின்னரும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத நிலையிலும், 2 ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், போதிய கால அவகாசம் வழங்கிய பின்னரும், நீதிமன்றத்தில் முன்னிலையாகாத நிலையில், அழைத்தும் ஆஜராகாததாலும், எவ்வித எடுத்துரைப்புமில்லாததாலும், 1, 2, 3 பிரதிவாதிகளைப் பொறுத்து ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளனர்.

4. இவ்வழக்கில், வாதி தரப்பில், வாதி திரு.நடராஜன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இவ்வழக்கில், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

6. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை யாதெனில், வழக்குரையில் கோரியவாறு, பிராது தபசில் சொத்தைப் பொறுத்து, பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கோரும் நிரந்தர தடையாணை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

## 7. பிரச்சனைக்குரிய தீர்வு :-

வாதியின் வழக்கு மெய்பிக்கப்பட்டுள்ளதா? என ஆராயும்போது, பிராது தபசில் சொத்தானது ஆதிதிராவிடர் நலத்துறை வழங்கிய இலவச வீட்டு மனை என்பதால், அதன் உரிமையாளரான 1ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி கலைமதி ஆகியோர் 1ம் பிரதிவாதியின் சகோதரியும், வாதியின் மனைவியுமான கருப்பம்மாள் என்பவரிடம் 26 வருடங்களுக்கு முன்னரே பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துவிட்டதாகவும், அந்த பதிவு செய்யப்படாத ஆவணம் தொலைந்து விட்டதால் மீண்டும் 1ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் 20.09.2019ம் தேதியன்று பதிவு செய்யப்படாத ஆவணம் மூலம் வாதியின் மனைவிக்கு கிரையத்தை உறுதிப்படுத்தி மற்றொரு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளதாகவும், அதனடிப்படையில், உரிமையாளராக இருந்த வாதியின் மனைவி 05.11.2019ம் தேதியன்று வாதிக்கு ஏற்பாடு செய்து கொடுத்ததன் காரணமாக வாதி தபசில் சொத்தின் உரிமையாளராக அனுபவித்து வருகிறார் என தபசில் சொத்திற்குரிய முன்பாத்திய விவரத்தை வாதி முன்னிலைப்படுத்யுள்ளார்.

8. வழக்குரை சங்கதிகளை அனுசரித்து வா.சா.1 திரு.நடராஜன் முதல் விசாரணை உறுதிக்கூற்றினை தாக்கல் செய்து, அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களை முன்னிலைப்படுத்தியுள்ளார். 1ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி கலைமதி ஆகியோருக்கு வழங்கப்பட்ட இலவச வீட்டு மனை பட்டா வா.சா.ஆ.7 ஆகவும், மேற்படி மனை அடங்கிய

ஆதிதிராவிடர் நல மனைப்பிரிவு வரைபடம் வா.சா.ஆ.8 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. வா.சா.ஆ.7 ல் கண்டுள்ள இப்பிராது தபசில் சொத்தானது இலவச வீட்டு மனை ஒப்படைவு பட்டா மூலம் வழங்கப்பட்ட சொத்து என்பதால் அதைப் பொறுத்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ஏற்படுத்த முடியாது என்ற காரணத்திற்காக 1ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் வாதியின் மனைவிக்கு பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் மூலம் விற்பனை செய்து விட்டதாக வாதியின் வழக்கு உள்ளது.

10. மேலும், கடந்த 26 ஆண்டுகளுக்கு முன்னரே வாதியின் மனைவி பதிவு செய்யப்படாத ஆவணம் மூலம் கிரையம் பெற்ற காரணத்தினால் தான் வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 ஆவணங்கள் வாதியின் மனைவி வசம் ஒப்படைக்கப்பட்டிருந்ததாக வாதியின் வாதம் உள்ளது. பதிவு செய்யப்படாத ஆவணம் மூலம் சொத்தின் உரிமை மாற்றம் சட்டப்படியாக ஏற்படுவதில்லை. எனினும், தபசில் சொத்தின் அனுபவமானது 1ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் 26 ஆண்டுகளுக்கு முன்னரே பதிவு செய்யப்படாத ஆவணம் மூலம் கிரையம் கொடுத்த காலம் முதல் வாதியின் மனைவி வசம் இருந்ததாக கூறும் வாதியின் வழக்கை மறுத்துரைக்க பிரதிவாதிகள் முன்னிலையாகவில்லை. ஆக, 1ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவியின் உரிமைக்கு எதிராக எதிரிடை அனுபவம் மூலம் வாதியின் மனைவிக்கு உரிமையும், அனுபவமும் இருந்தது என்பது உறுதியாகிறது.

11. இந்நிலையில், வா.சா.ஆ.7 ஒப்படைவு செய்யப்பட்ட 30 ஆண்டுகள் கடந்த பின்னர் தபசில் சொத்தில் வாதியின் மனைவிக்கு சட்டப்படியான உரிமை ஏற்பட்டுவிட்டதன் காரணமாக வாதிக்கு வேறு சொத்துடன் தபசில் சொத்தையும் சேர்த்து ஏற்பாடு செய்துவிட்டதாக முன்வைக்கப்பட்ட சங்கதிக்கு ஆதரவாக வா.சா.ஆ.1 ஆன ஏற்பாடு ஆவணமானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12. வாதியின் பெயருக்கு ஏற்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு தபசில் சொத்தைப் பொறுத்து வருவாய்துறையில் பெயர் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை வா.சா.ஆ.2 ஆன வாதியின் பெயரில் உள்ள சொத்து வரி ரசீது உறுதி செய்கிறது .

13. மேலும், வாதி தபசில் சொத்தை 3ம் நபருக்கு அடமானமும் செய்து, அனுபவித்து வருகிறார் என்பதற்கு ஆதரவாக வா.சா.ஆ.6 ஆன அடமான ஆவணமும், மேற்படி அடமான பதிவை காண்பிக்கக்கூடிய வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.5 ஆகவும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. ஆக, வாதி தரப்பு வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2, வா.சா.ஆ.4 மற்றும் வா.சா..ஆ.5 ஆகிய ஆவணங்களிலிருந்து தபசில் சொத்தானது வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதை நிரூபணம் செய்கிறது.

14. இந்நிலையில், தபசில் சொத்தை பொறுத்து வாதியின் அனுபவத்தை இடையூறு செய்ததால் வாதியின் மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 புகார் மனுக்களின் கையிருப்பு நகல்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. ஆக, தபசில் சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு உள்ளதாக வாதியின் வழக்கு ஆவணப்பூர்வமாக தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

15. மேலும், நீதிமன்ற அழைப்பாணையின் மூலம் வழக்கு விபரங்களை நன்கு அறிந்து கொண்டுள்ள பிரதிவாதிகள் தபசில் சொத்தில் வாதிக்கு உரிமை இல்லை என்றோ, அது அவரது அனுபவத்தில் இருந்து வரவில்லை என்றோ, வாதியின் வசம் அசல் ஒப்படைவு பட்டா எவ்வாறு சென்றது என்றோ, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பிற்கு தபசில் சொத்தை பொறுத்து சட்டப்படியான உரிமை உள்ளதாகவோ, பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கோரும் நிரந்தர தடையாணை பரிகாரம் வாதிக்கு வழங்கக் கூடியதில்லை என்றோ மறுத்து எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்ய முன்னிலையாகவில்லை. மாறாக, தோன்றாதரப்பினராக இருந்து வருவதிலிருந்து வாதியின் வழக்கை மறுத்துத்துரைக்கதக்க எதிர்வழக்கு பிரதிவாதிகளுக்கு இல்லை என்றே அனுமானம் கொள்ள வேண்டியதாகிறது.

16. ஆதலால், பிராது தபசில் சொத்தில் வாதியின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, பிராது தபசில் சொத்தைப் பொறுத்து, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கோரும் நிரந்தர தடையாணை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றும், இவ்வழக்கின் தன்மையைக் கருத்தில்கொண்டு, இவ்வழக்கின் செலவு தொகை மற்றும் இதர பரிகாரங்கள் வாதிக்கு வழங்கக்கூடியதல்ல என்றும் இவ்வழக்கில் எழுந்துள்ள பிரச்சனைக்கு இவ்வாறாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**முடிவாக**, இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, பிராது தபசில் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, ஏவு ஆட்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுதொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P SUMITHA

Digitally signed by P SUMITHA
Date: 2022.04.19 17:46:10 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

தென்காசி.

**<u>வாதி தரப்பு சாட்சி</u> :-**

1. வா.சா.1 திரு. நடராஜன் (வாதி)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

| | | | |
|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.1 | 05.11.2019 | வாதிக்கு அவரது மனைவி கருப்பம்மாள் என்பவர் எழுதிக் கொடுத்த ஏற்பாடு ஆவணம் (ஆவண எண். 2348/2019) --- சான்றளிக்கப்பட்ட நகல் |
| 2. | வா.சா.ஆ.2 | 01.09.2020 | தபசில் சொத்திற்கு வாதி செலுத்திய தீர்வை ரசீது எண்ணம் 1 --- அசல் |
| 3. | வா.சா.ஆ.3 | 06.02.2020 | வாதியின் மனைவி கருப்பம்மாள் என்பவர் பிரதிவாதிகள் மீது கடையநல்லூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் கையிருப்பு நகல் மற்றும் அதற்கு வழங்கப்பட்ட புகார் மனு ரசீது |
| 4. | வா.சா.ஆ.4 | 11.02.2020 | வாதியின் மனைவி கருப்பம்மாள் என்பவர் பிரதிவாதிகள் மீது தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் மனுவின் கையிருப்பு நகல் |
| 5. | வா.சா.ஆ.5 | 22.11.2020 | தபசில் சொத்திற்குரிய வில்லங்க சான்றிதழ் கணினிவழி பதிவிறக்க நகல் |

| | | | |
|---|---|---|---|
| 6. | வா.சா.ஆ.6 | 28.09.2020 | பிராது தபசில் சொத்தினைப் பொறுத்து வாதி, மாடசாமி என்பவருக்கு எழுதிக் கொடுத்த அடமான ஆவணம் (ஆவண எண்.3365/ 2020) -- சான்றளிக்கப்பட்ட நகல் |
| 7. | வா.சா.ஆ.7 | 09.09.1989 | 1ம் பிரதிவாதிக்கு தமிழக அரசு வழங்கிய இலவச வீட்டு மனை பட்டா (பட்டா எண் 174) --- அசல் |
| 8. | வா.சா.ஆ.8 | 09.09.1989 | 1ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட ஆதிதிராவிட நலம் மனைப் பிரிவு வரைபடம் --- அசல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** :-

**இல்லை**

P SUMITHA Digitally signed by P SUMITHA Date: 2022.04.19 17:46:39 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**தென்காசி.**